**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.</u>**

**<u>OS.No. 202/2021</u>**

| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|---|---|
| NAME | ஏகாம்பரம் | TALUK | |
| HUSBAND NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 13.08.2025.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

1. எனது முகவரி என்னவென்றால் சின்னாலபள்ளி கிராமம், வெங்கடாபுரம் அஞ்சல், குடியாத்தம் தாலுக்கா. என்ன தொழில் செய்கிறேன் என்றால் தீப்பெட்டி கம்பெனி வைத்துள்ளேன். பிரதிவாதியை முதலில் எங்கு பார்த்தேன் என்றால் அவருடைய அரிசி கடையில் பார்த்தேன். பிரதிவாதி உறவினரா அல்லது நண்பரா என்றால் இல்லை, அவர் கடைக்கு போய் வந்ததால் தெரியும்.

2. அவருக்கு 26.10.2019–ல் கடன் கொடுத்தேன். 50,000/– கொடுத்தேன். அந்த பணம் எனக்கு எப்படி வந்தது என்றால் தீப்பெட்டி கம்பெனி வியாபாரத்தில் வந்தது. கையில் இருந்து கொடுத்தேனா அல்லது வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேனா என்றால் கையில் இருந்து கொடுத்தேன். எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் தாலுக்கா அலுவலகத்திடம் வைத்து கொடுத்தேன்.

3. கடனுறுதி சீட்டை யார் எழுதியது என்றால் தாலுக்கா அலுவலகத்தில் உள்ள லிங்கேஷ்வரன் என்பவர் எழுதினார். கடனுறுதி சீட்டு எழுதும்போது பிரதிவாதி அங்கிருந்தாரா என்றால் இருந்தார். எனது கண் முன் தான் வினோத்குமார் கையெழுத்து போட்டாரா என்றால் ஆமாம். பிரதிவாதி கடனுறுதி சீட்டிலுள்ள கையெழுத்து பிரதிவாதியினுடையது அல்ல என்றால் சரியல்ல.

4. அவருடைய கையெழுத்தை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ஆட்சேபனை இல்லை. வட்டி எவ்வளவு பேசினோம் என்றால் மாதத்திற்கு 2 ரூபாய். பிரதிவாதி இதுவரை வட்டி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பை எப்போது அனுப்பினேன் என்றால் தேதி ஞாபகமில்லை 2021ஆம் ஆண்டு அனுப்பினேன்.

5. பிரதிவாதியின் எந்த முகவரிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் மேல்பட்டி ரோட்டில் உள்ள அவரது கடை முகவரிக்கு அனுப்பினேன். கடை பெயர் அம்மன் அரிசி மண்டி. கடை பெயர் தவறானது என்றாலும் உண்மையில் இரண்டு வருடம் அவர் கடைக்கு சென்று வந்திருந்தால் கடையின் விவரங்களை சரியாக சொல்லியிருப்பேன் என்றாலும் போய் வராததால் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் என்னவென்றால் அவர் அரிசி வியாபாரம் செய்ய பணம் இல்லையென இரண்டு மாதங்களாக கேட்டு வந்தார். பிரதிவாதிக்கு மாதம் 25,000/- வருவாய் வருகிறது என நானே சொல்லியுள்ள நிலையில் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டு எழுதியதும், பிரதிவாதி கையெழுத்து போட்டதும் ஒரே பேனா மையினாலா என்றால் இல்லை, கடனுறுதி சீட்டை கருப்பு பேனா மையினால் எழுதி பிரதிவாதி அவருடைய நீல மை பேனாவை எடுத்து கையெழுத்து போட்டார்.

7. பிரதிவாதி கையெழுத்து போட்டதை நிரூபிக்க முடியுமா என்றால் சாட்சிகள் இரண்டு பேரை பிரதிவாதி தான் கூட்டி வந்தார் அவர்கள் சொல்வார்கள். பிரதிவாதிக்கு என்னை பார்த்ததில்லை என்றாலும் கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து அவருடையது இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு மூலமாக பிரதிவாதியிடம் பணம் பறிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH
Date: 2025.08.13 16:31:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.